கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் – ‘நான் முதல்வன்’ திட்டம் குறித்து

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாணவர்களுடன் கலந்துரையாடல்!

திறன் பயிற்சி சான்றிதழ்களை வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, ஜூலை. 21 – கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் ஏ.கே.டி பள்ளி கூட்டரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டம் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுடன், பொதுப்பணித்துறை (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசெண்ட திவ்யா, சிறப்பு திட்ட அமலாக்கத் துறை செயலாளர் மரு.தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார் ஆகியோர் முன்னிலையில் (19.07.2023 அன்று கலந்துரையாடினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இரண்டு கண்களாக பார்ப்பது, சுகாதாரம் மற்றும் பள்ளி கல்வித்துறையை தான். பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்றவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காக நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு மாணவரும் தனது துறையில் முதல்வனாக திகழ வேண்டுமென்பதே நான் முதல்வன் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் 14 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற கலை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த 1.425 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் வருங்காலத்தில் தொழில் முனைவோராகவும், தொழில் வல்லுனராகவும் உருவாகிட இத்திட்டம் உறுதுணையாக இருக்கும்.

மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொண்டு வந்து, வேலையில்லாத நிலையை மாற்றிடவே நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்திற்கென கல்லூரி ஒன்றிற்கு ரூ.70 லட்சம் வீதம் ரூ.21 கோடியே 70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைவினை பொருட்கள் செய்யும் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5 கோடி செலவில் கைவினை பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

மாணவர்களின் கற்றலை அதிகரிக்க விளையாட்டு முறை கற்றலை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1 கோடி செலவில் 1,000 பள்ளிகளில் விளையாட்டு முறை கற்றல் செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு திறன் பயிற்சி மையங்களில் பயில்பவர்களுக்கு பயிற்சிநின்றுவிடாமல் பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு நான் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் பாடங்களை படித்து, மதிப்பெண் பெறுவதோடு செயல்படுத்தப்படுகிறது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் ஆர்டிபிஷியல் இன்டலிஜன்ஸ், மிஷன் லேர்னிங் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை திறன் பயிற்சியில் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரின் தனித்திறமையை கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துவதே நான் முதல்வன் திட்டத்தின் தனிச்சிறப்பு. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் திறன் பயிற்சிகளை வழங்க அந்தந்த கல்லூரி பேராசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கென பேராசிரியர்களுக்கு தனி பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அரசு திட்டங்களின் வெற்றி என்பது அதனால் அடையும் பயனை பொருத்து அமையும். நான் முதல்வன் திட்டத்தினை மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திகொள்ள வேண்டுமென இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுடன் திறன் பயிற்சி, வேலை வாய்ப்புகள் மற்றும் நான் முதல்வன் திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

தொடர்ந்து, சின்னசேலம் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள 10 மாணவர்களுக்கு திறன் பயிற்சிக்கான சான்றிதழை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ந.மோகன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் நா.சத்தியநாராயணன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம். க. கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ – மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்குவதையொட்டி புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலைச் சந்திப்பதால்

பா.ஜ.க.வின் இடங்கள் பறிபோவது நிச்சயம்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 21- அடுத்த ஆண்டு நடக்கும் மக்களவைத் தேர்தலைச் சந்திக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இருப்பதாக பா.ஜ.க..க.விடம் இருந்து இடங்கள் பறிபோவது நிச்சயம் என தினகரன் நாளேடு 19.7.2023 அன்று தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

இந்தியாவைத் துண்டாட பிரித்தாளும் கொள்கையை பயன்படுத்தியது அன்றைய பிரிட்டிஷ் அரசு. இன்று மத்தியில் ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க, அதே பிரித்தாளும் கொள்கையை பின்பற்றுகிறது மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு. சிபிஐ, அமலாக்கத்துறையை பயன்படுத்தி மாநில ஆட்சிகளை பிடிப்பது, கட்சிகளை பிரிப்பது உள்ளிட்ட வேலைகள் அதிவேகமாக நடந்து வருகிறது. காரணம் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தல். நாடு முழுவதும் வலிமை மிக்க 26 எதிர்க்கட்சி தலைவர்கள் பெங்களூருவில் கூடி ஆலோசனை நடத்தி முடித்து இருக்கிறார்கள்.

ஒன்றாக தேர்தலை சந்திப்பது அவர்களது நோக்கம். அப்படி ஒரு காரியம் நடந்து விட்டால் 2024 மக்களவை தேர்தல் பா.ஜ.க.வுக்கு மிகப்பெரிய தலைவலியாக மாறிவிடும். அந்த பயம் பா.ஜ.க.வுக்கு இப்போதே வந்து விட்டது. பா.ஜ.க.வும், காங்கிரசும் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் தொகுதிகள் தவிர மாநில கட்சிகள் பலம் மிக்க மாநிலங்களில் பா.ஜ.க.வின் வெற்றி வாய்ப்பு இப்போது குறைந்து விட்டது. பீகார், மகாராஷ்டிரா, மேற்குவங்கம் மற்றும் தென்மாநிலங்களில் பா.ஜ.க. செல்லாக்காசாகி விடும். அப்படி நடக்கும் பட்சத்தில் தொடர்ந்து 3வது முறையாக பா.ஜ.க. ஆட்சி, மீண்டும் ஒரு முறை மோடி என்ற பா.ஜ.க.வின் கோஷம் மங்கிப்போய் விடும்.

அதனால் தான் இப்போது நாடு முழுவதும் உள்ள அத்தனை எதிர்க்கட்சிகளையும் குறிவைத்து வேட்டையாடும் பணியை அமலாக்கத்துறை, சிபிஐ உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் மூலம் பா.ஜ.க. மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு, கர்நாடகா, தெலங்கானா, கேரளா, ஆந்திரா உள்ளடக்கிய தென்மாநிலங்களில் மட்டும் 130 மக்களவை தொகுதிகள் உள்ளன. இதில் கடந்த முறை கர்நாடகாவில் 25, தெலங்கானாவில் 4 தொகுதிகள் மட்டுமே பா.ஜ.க. கணக்கில் சேர்ந்தது. மற்ற தொகுதிகள் எதிர்க்கட்சிகள் வசம். இப்போது கர்நாடகாவிலும் சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க.வுக்கு தோல்வி.

அடுத்த ஆண்டு நடக்கும் மக்களவை தேர்தல் அங்கு சாதகம் இல்லை. அதே போல் பீகாரில் மொத்தம் உள்ள 40 தொகுதிகளில் பா.ஜ.க.வுக்கு மட்டும் 17 இடங்களும், மகாராஷ்டிராவில் 48 இடங்களில் 23 இடங்களும் மேற்குவங்கத்தில் 42

தினகரன்

பிரித்தாளும் பா.ஜ

இடங்களில் 18 இடங்களும் பா.ஜ.க.வுக்கு கிடைத்தன. இந்த முறை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை சந்திக்க முடிவு எடுத்து இருப்பதால் இந்த இடங்களும் பா.ஜ.க.விடம் இருந்து பறிபோவது நிச்சயம். அந்த பீதியில் தான் பா.ஜ.க., பீகாரில் மகாபந்தன் கூட்டணியை உடைத்தது, மகாராஷ்டிராவில் சிவசேனா கட்சியை பிளந்தது, தேசியவாத காங்கிரஸ் கட்சியை உருக்குலைத்தது.

இப்போது தமிழ்நாட்டில் அமலாக்கத்துறை மூலம் திமுக தலைமையிலான ஆளும்கூட்டணிக்கு பயம் காட்டிவிடலாம் என்று கணக்கு போட்டு களம் இறங்கியிருக்கிறது பா.ஜ.க.. ஜூன் 13ம் தேதி நள்ளிரவில் அமைச்சர் செந்தில்பாலாஜியை பழைய வழக்கு ஒன்றை கணக்கு காட்டி கைது செய்தார்கள். இப்போது 11 ஆண்டுக்கு முன்பு பதிவு செய்யப்பட்ட வழக்கை கைவசம் வைத்துக்கொண்டு மூத்த அமைச்சர் பொன்முடியை மிரட்டி விடலாம் என்று நினைத்து காய் நகர்த்துகிறார்கள். இவை எல்லாம் அடுத்த ஆண்டு தேர்தலுக்காக பா.ஜ.க. பயன்படுத்தும் யுக்திகள். அப்படி அவர்கள் நினைத்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் தென்மாநிலங்களில் மிகப்பெரிய அளவில் காலூன்றி விடலாம் என்பது பா.ஜ.க. போடும் கணக்கு. ஆனால் மக்களின் மனக்கணக்கு அடுத்த ஆண்டு மக்களவை தேர்தலில் பா.ஜ.க.வுக்கு தெளிவாக தெரிய வரும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய

‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் மணிப்பூர் பயணம்!

நாளை செல்கின்றனர்!

இம்பால், ஜூலை 21- மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் நாளை மணிப்பூர் செல்கின்றனர்.

மணிப்பூரில் கடந்த 80 நாட்களுக்கும் மேலான பயங்கர வன்முறை நீடித்து வருகிறது. மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் இருவர், நிர்வாணமாக்கப்பட்டு இழுத்துச் சென்ற கொடூரம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், மணிப்பூர் கொடூரம் குறித்து நேரில் ஆய்வு செய்ய “இந்தியா” கூட்டணித் தலைவர்கள் நாளை மணிப்பூர் பயணம் செய்ய உள்ளனர்.

குடியரசுத் தலைவரைச் சந்தித்து முறையிடவும் “இந்தியா” கூட்டணித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

மணிப்பூர் கலவரம் குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் “இந்தியா” கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

38 கட்சிகளுடன் பேச நேரம் இருந்த

பிரதமருக்கு மணிப்பூர் செல்ல நேரம் இல்லையா?

மல்லிகார்ஜுன கார்கே கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 21- 38 கட்சிகளுடன் பேச நேரம் உள்ள பிரதமர் மோடிக்கு, மணிப்பூர் செல்ல நேரம் இல்லையா? என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

மோடி அரசும் பா.ஜ.க.வும் மணிப்பூர் மாநிலத்தின் நுட்பமான சமூக அமைப்பை அழித்து, ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் பெருங் குற்றமாக மாற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசை இந்தியா ஒருபோதும் மன்னிக்காது என்றும் மணிப்பூரைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசி, ஒன்றியத்திலும் மாநிலத்திலும் பா.ஜ.க.வின் இரட்டை இயலாமைக்கு மற்றவர்களைக் குற்றம் சொல்லாமல், என்ன நடந்தது என்பதை நாட்டுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கிறார்.

38 கட்சிகளுடன் பேச பிரதமருக்கு நேரம் உள்ளது; ஆனால் மணிப்பூர் செல்ல பிரதமருக்கு நேரம் இல்லையா ? எனவும் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

எப்படி மீனாட்சி கோயிலும் திருமலை மகாலும் நினைவுக்கு வருகிறதோ

இனி மதுரை என்றால் ‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’ தான்!

‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 21- எப்படி மதுரை என்றால் மணக்கும் மல்லியும், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலும், திருமலை நாயக்கர் மகாலும் நினைவுக்கு வருகிறதோ அது போல இப்போது மதுரை என்ற உடன் கலைஞர் நூற்றாண்டு நூலகமும் நினைவுக்கு வரும் என தினத்தந்தி நாளேடு 19.7.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

மறைந்த முத்த மிழறிஞர் கலைஞர், ஒரு பன்முகத் தன்மை கொண்ட வித்தகர். பேச்சாற்றலிலும், எழுத்தாற்றலிலும், மனிதாபிமானத்திலும், நிர்வாக ஆற்றலிலும், அரசியல் சாதுர்யத்திலும் அவருக்கு நிகர் அவரே. எழுத்திலும், வாசிப்பிலும் தீராக் காதல் கொண்டவர்.

அவரது நினைவைப் போற்றும் வகையில், சங்கம் வளர்த்த மதுரையில் அறிவுத் திருக்கோவிலாக, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். ஏற்கனவே, மக்களுக்கு பல மருத்துவ திட்டங்களை செயலாக்கத்துக்கு கொண்டுவந்த கலைஞர் கருணாநிதியின் நினைவை போற்றும் வகையில், சென்னை கிண்டியில் ரூ.230 கோடி மதிப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை 4.89 ஏக்கரில் கட்டி, கடந்த மாதம் அதை டாக்டர்நர்சுகளுடன் சேர்ந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். எப்படி சென்னை யில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை முத்தமிழறிஞர் கலைஞர் திறந்தாரோ, அதுபோல ‘தமிழ் நகரம்’ என்று புகழப்படும் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்க முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டு, மின்னல் வேகத்தில் பணிகளை முடித்து, ஜூலை 15ந்தேதி திறக்கப்பட்டது.

தலையங்கம்

தினத்தந்தி

19.7.2023

அறிவு திருக்கோவிலாக கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

திறப்பு விழாவின் போது, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியதுபோல, தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை என்றால், தமிழ்நாட்டின் கலைநகர் மதுரைதான். இந்த பிரமாண்டமான நூலகம் 2 லட்சத்து 13 ஆயிரத்து 338 சதுரடி பரப்பில், ரூ.120 கோடியே 75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. முற்றிலும் குளுமை வசதியுடனான இந்த நூலகம், 6 தளங்களைக் கொண்டது. 3 லட்சத்து 30 ஆயிரம் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. எல்லா துறை தொடர்பான நூல்களும் இங்கு இருக்கிறது. 1824ல் வெளிவந்த சதுரகராதி முதல் பதிப்பு லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தை அடுத்து இங்கு தான் இருக்கிறது. இப்படி பழமையான நூல்கள் முதற்கொண்டு நவீன நூல்கள் வரை எல்லாம் இருக்கிறது. தரைத்தளத்தில், தமிழ்நாடு பாடநூல்கள், போட்டித் தேர்வுக்கான நூல்கள் ஆகியவற்றை பார்வையற்றோர் எளிதாக பயிலும் வகையில், ‘பிரெய்லி’ எழுத்துகளோடு படிக்கக்கூடிய 1,800 நூல்கள் இடம்பெற்றுள்ளன. முதல் தளத்தில் 30 ஆயிரம் குழந்தைகளுக்கான நூல்களும், 2ம் தளத்தில் ஒரு லட்சம் தமிழ் இலக்கியம் உள்பட அனைத்து பிரிவு நூல்களும், 3ம் தளத்திலுள்ள ஆங்கில நூல்கள் பிரிவில், ஒரு லட்சம் அனைத்து வகை நூல்களும், 4ம் தளத்தில் போட்டித் தேர்வுக்கான 30 ஆயிரம் நூல்களும், 50 ஆயிரம் ஆங்கில குறிப்பு உதவி நூல்களும் இடம் பெற்றுள்ளன. 6ம் தளத்திலும் 60 ஆயிரம் ஆங்கில குறிப்பு உதவி நூல்களும், 16 ஆயிரம் அரிய நூல்களும் உள்ளன. போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் தென் மாவட்ட மாணவர்களுக்கு இந்த நூலகம் ஒரு கலங்கரை விளக்கமாகும். ஒரு குடும்பமாக சென்றால், பெண்களுக்கு சமையல் புத்தகங்கள், குழந்தைகளுக்கு காமிக்ஸ் நூல்கள், இளைஞர்களுக்கு போட்டித் தேர்வுக்கான நூல்கள் பாட சம்பந்தமான நூல்கள், பெரியவர்களுக்கு ஆன்மிக, தத்துவ நூல்கள் என்று எல்லா வயதுக்கு ஏற்ற நூல்கள் இங்கு இருக்கின்றன. எப்படி, மதுரை என்றால் மணக்கும் மல்லியும், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும், திருமலை நாயக்கர் மகாலும் நினைவுக்கு வருமோ, அது போல இப்போது மதுரை என்ற உடனேயே இந்த அறிவுக் கோவிலாம் கலைஞர் நூற்றாண்டு நூலகம் தான் என்றென்றும் நினைவுக்கு வரும், முத்திரை பதிக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தேனி வடக்கு மாவட்டம் தருமாபுரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் தேனி ஒன்றியக் குழு தலைவர் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் சேவல் சண்டை நடைபெற்றது உடன் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ரத்தினசபாவதி மற்றும் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் முன்னிலையில் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம் – ஏலகிரியில் – தமிழ்நாடு மாநில

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டம்!

மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையில் நடைபெற்றது!

திருப்பத்தூர், ஜூலை 21- தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச. மாநில நிர்வாகிகள் கூட்டம் திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி ஊராட்சி அண்ணா கருத்தரங்கில் 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

தொ.மு.ச.பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி.யின் அறிவுறுத்தலின் பேரில் பொருளாளர் கி.நடராஜன், பேரவை செயலாளர் இரா.பொன்னுராம், அலுவலக செயலாளர் ஆ.சீ.அருணகிரி ஆகியோரின் வாழ்த்துக்களோடு இக்கூட்டத்தினை மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையில் பொருளாளர் சேலம் பொன்னி இரா.பழனியப்பன்,துணைத்தலைவர்கள் சென்னை சிந்தாமணி மரு. இரா.இராஜன், வேலூர்கற்பகம் கே.மலர்க்கொடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மொ.வி.ப.சாலை தொ.மு.ச. திருவாரூர் டி. காளிதாஸ், டி.யு.சி.எஸ். இராஜன் சாமிநாதன், காஞ்சிபுரம் கா.செல்வமணி, சென்னை சிந்தாமணி அ.பாஸ்கரன், திருவள்ளூர் நெடுஞ்செழியன், திருவண்ணாமலை பி. பாண்டியன்,வேலூர் பாபு,சேலம் ஏ.கோபிநாத்,திருச்சி சிந்தாமணி ராஜேந்திரன், அமராவதி சதீஷ், திருநெல்வேலி சைபுதீன்,சிவகங்கை சரவணன், மலைச்சாமி, கோயம்புத்தூர் பிரவீன், இராமநாதபுரம் சந்திரன், தஞ்சாவூர் சண்முகம், கும்பகோணம் கார்த்திகேயன் ஆகியோர் தொழிலாளர்களின் பிரச்சினைகள், சங்கத்தின் வளர்ச்சிக்கு தேவையான ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துரைத்தனர்.

அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தீர்மானங்களை மாநில பொதுச் செயலாளர் சு.பத்மநாபன் நிறைவேற்றி தர உரையாற்றினார்.

பணியிலிருந்து ஓய்வு பெறும் சிவகங்கை மாவட்ட மொத்தவிற்பனை பண்டகசாலை பொதுச்செயலாளர் க.நாகராஜ் அவர்களுக்கு அனைத்து மொத்த விற்பனை பண்டக சாலைகள் நிர்வாகிகள் சார்பாக பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

வேலூர்எம்.ஏழுமலை நன்றி கூற மாநிலத்திலுள்ள அனைத்து பண்டகசாலை நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய நாளான ஜூலை 18 ம் நாள் “தமிழ்நாடு நாள்” விழா புதிய பஸ் ஸ்டாண்டில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மகாராஜன் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் செய்தி துறை சார்பாக புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டனர். உடன் ஒன்றியக் குழு தலைவர் – வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி. தேனி நகர மன்ற தலைவர் ரேணுகா பாலமுருகன்மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.